<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**</u>

<u>**CC. No.103/2020**</u>

2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி -01 , திருமதி.தேவயானி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.தேவயானி | வயது | |
| த.பெ/ க.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | சாதி | : |
| மாவட்டம் | : | | |

**முதல் விசாரணை**

1) நான் நரியங்குழியில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். இறந்துபோன பாஸ்கர் எனது கணவர். 10.11.2019 ம் தேதியன்று எனது கணவர் புதுப்பாளையத்தில் ராம்கோ சிமெண்ட் பேக்டரியில் பணி முடித்துவிட்டு, மாலை 06.30 மணியளவில் எனது கணவரின் நண்பர் சுரேஷ் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு, அவருக்கு சொந்தமான டிவிஎஸ் எக்ஸ் எல் 6506 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில், வி.கைகாட்டி ரெட்டிப்பாளையத்திலுள்ள விளையாட்டுத் திடல் அருகே என் கணவரும் அவரது நண்பரும் இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்துக்கொண்டிருந்தபோது, டிஎன் 2012 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியை கடந்துச் சென்றபோது, எதிரே வந்த இருசக்கர வாகனம் வேகமாக வந்து, என் கணவர் மீது மோதியது.

2) எனது கணவரும் பின்னால் உட்கார்ந்து வந்த சுரேஷ் என்பவரும் கீழே விழுந்துவிட்டார்கள். கீழே விழுந்த என் கணவர் மீது பின்னால் வந்த 2012 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி என் கணவரின் காலில் ஏறி சிறிது தூரம் இழுத்துச் சென்றுவிட்டது. அதில் என் கணவருக்கு இரண்டு கால்களும் நசுங்கிவிட்டது. என் கணவர் அடிபட்டு கிடப்பதாக அருகிலிருந்தவர்கள் போன் மூலம் தகவல் சொன்னார்கள். அங்கிருந்து அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு என் கணவர் இறந்துவிட்டார். என் கணவர் மீது மோதிய நபர் பெயர் பெரியசாமி என்று சொன்னார்கள். என் கணவர் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. என் கணவர் இறந்தது குறித்து காவல்

நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். ( **புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

### எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது, குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள். அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒம்/-இரா.இராஜசேகரன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1

ஜெயங்கொண்டம்.

# <u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>

## <u>CC. No.103/2020</u>

2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி -02 , திரு.தேவேந்திரன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : திரு.தேவேந்திரன் வயது

த.பெ/ க.பெ. : தொழில் :

ஊர் : சமயம் :

வட்டம் : சாதி :

மாவட்டம் :

**முதல் விசாரணை**

நான் நரியங்குழியில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இறந்துபோன பாஸ்கரைத் தெரியும். அசா1 ஐ தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம என்னுடையதுதான். 10.11.2019 ம் தேதி இரவு 08.00 மணியளவில் ரெட்டிப்பாளையம் விளையாட்டுத்திடல் அருகே பாஸ்கர் அடிபட்டது சம்மந்தமாக போலீசார் விசாரிக்க வந்தார்கள். வரைபடம் தயார் செய்தார்கள். அப்போது சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் சேகர் என்பவரும் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்தோம். ( **பார்வை மகசர் அதசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது, குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள். அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒம்/-இரா.இராஜசேகரன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1

ஜெயங்கொண்டம்.